யட்டிநுவர பிரதேச சபை

-----------------------------------

கண்டி மாவட்டம்

--------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

--------------------------

1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

---------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மார்ச் 30ஆம் திகதியிலும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 31ஆம் திகதியிலும் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன்,மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016ஆகஸ்ட் 03 ஆம் திகதி சபையின் செயலாளருக்கு வழங்கப்பட்டது.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

.....................................................

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து யட்டிநுவர பிரதேசசபையின் 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

----------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 1,427,170 பெறுமதியான உபகரணங்கள், நிலையான சொத்துக்களின் கீழ் கணக்குகளில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் சபைக்கு நன்கொடையாக 2014 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டிருந்த ரூபா 35,964,560 பெறுமதியான 06 வாகனங்களினதும்,அத்துடன் கமநல சேவை திணைக்களத்தினால் 2011 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டிருந்த ரூபா 265,000 பெறுமதியான சிறிய திராக்டரினதும் உரிமை இதுவரையில் சபைக்கு உரித்துமாற்றம் செய்யப்படாமையினால், குறித்த பெறுமதிகள் கணக்கீட்டு குறிப்புகள்மூலம் வெளிப்படுத்தப்பட

வேண்டியபோதிலும்,மோட்டார் வாகனங்கள் மற்றும் கரத்தைவண்டி கீழ் கணக்குகளில் காட்டப்பட்டுள்ளது.

(இ) 04 நிலையான வைப்புக்கள் பொருட்டு மீளாய்வாண்டிற்கு ஏற்புடைய வட்டி வருமானமான ரூபா 541,668 கணக்குகளில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டில் செயற்படுத்தப்பட்டிருந்த 04 செயற்றிட்டங்களுக்கு ஏற்புடையதாக வருடத்தின் இறுதித் திகதியில் செலுத்த வேண்டியிருந்த ரூபா 1,221,754கடன்கொடுத்தோர் கீழ் இருமுறை பதியப்பட்டிருந்தது.

1.3.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்
---------------------------------------------------------------------------------

நிதிக் கூற்றுக்களின்படி, நூலக புத்தகங்களின் பெறுமதியானது மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் ரூபா 3,213,145 காணப்பட்ட போதிலும், பண்டக் கணிப்பாய்வு அறிக்கையின் பிரகாரம் குறித்த பெறுமதி ரூபா 4,578,383 காணப்படுவதினால் ரூபா 1,365,238இணங்காமை அவதானிக்கப்பட்டது.

1.3.3 பெறவேண்டிய கணக்குகள்

.............................................

பெறவேண்டியதாக இருந்த கணக்கு மீதிகள் 07 விடயங்களின் கூட்டுப் பெறுமதி ரூபா 78,972,303 ஆக இருந்ததுடன், அவற்றுள் 05 வருட காலத்துக்கு மேல் இருந்த கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 497,472 ஆகும் அத்துடன்01 வருடத்துக்கும் 05 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலத்தில் இருந்த கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 32,261,048 ஆக இருந்தது.

1.3.4 செலுத்தவேண்டிய கணக்குகள்

....................................................

மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் இருந்த கடன்கொடுத்தோர் 02 மீதிகளின் கூட்டுப் பெறுமதி ரூபா 59,783,532 ஆக இருந்ததுடன், அவற்றுள் 05 வருட காலத்துக்கு மேல் இருந்த கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 853,122 ஆகும் அத்துடன் 01 வருடத்துக்கும் 05 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலத்தில் இருந்த கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 28,456,793 ஆக இருந்தது

1.3.5 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

------------------------------------------------------

02 கணக்கு விடயங்களுக்கு ஏற்புடையதாக தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையினால் ரூபா 83,042,963 பெறுமதியுடைய கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின்போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

1.3.6 சட்டங்கள், விதிகள்,பிரமாணங்களுடன் இணங்காமை

………………………………………………………………………………

1988 ம் ஆண்டின் பிரதேசசபைகள்(நிதி மற்றும் நிர்வாகம்)விதி 218 பிரகாரம் காணி கட்டடங்களை வருடாந்தம் பரீட்சித்துப் பார்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமலிருந்தது.

2. நிதி மீளாய்வு

---------------------

2.1 நிதிசார் விளைவுகள்

-------------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி 2015 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவிலும் கூடிய வருமானம்ரூபா 39,295,516 விளைந்திருப்பதுடன், நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவிலும் கூடிய வருமானம்ரூபா 34,721,435 விளைந்திருந்தமையினால்நிதிசார் விளைவுகளில்ரூபா 4,574,081 அதிகரிப்புகாணக்கூடியதாக இருந்தது.

2.2 பகுப்பாய்வுரீதியிலான நிதி மீளாய்வு

…………………………………………………………

பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் நிதிசார் செயலாற்றல் தொடர்பிலான முக்கியமான சில விகிதாசாரங்கள் பின்வருமாறு.

(அ) மீளாய்வாண்டு மற்றும் கடந்த இரு ஆண்டுகளினுள் நிதிசார் விளைவின் மிகை செயற்பாட்டு வருமானத்தின் சதவீதமாக எடுக்கையில் அந்த சதவீதத்தின் வீழ்ச்சியொன்றைக் காட்டுகின்றது.

(ஆ) மீளாய்வாண்டு மற்றும் கடந்த ஆண்டினுள் திரண்ட நிதியத்தின் மீதி தொடர்ந்து குறைந்து காணப்படுகிறது.

(இ) மீளாய்வாண்டில் ஒட்டுமொத்த குறைவு கடந்த ஆண்டின் ஒட்டுமொத்த மிகையுடன் ஒப்பிடுகையில்,ரூபா 36,538,530 குறைவில் அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டதுடன், அதற்கு 2015ஆம் ஆண்டில் 03 வருமான விடயங்களின் வருமானக்குறைவும் 04 செலவு விடயங்களின்

செலவுஅதிகரிப்பும்பிரதானமாக காரணமாக இருந்தனஎன கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது.

## 2.3 வருமான நிர்வாகம்

------------------------------

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம் உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானங்கள்

--------------------------------------------------------------------------------------------------------------

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பான மதிப்பிடப்பட்ட வருமானம், உண்மையான வருமானம் மற்றும் நிலுவை வருமானங்கள் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | 2015.01.01 திகதியில் நிலுவை மீதி | 2015 ஆண்டு பட்டியலிடல் | 2015 பெறுவனவு நிலுவையிலிருந்து பெறுவனவு | 2015 பட்டியல் இடலிருந்து பெறுவனவு | 2015.12.31 திகதியில்நிலுவை மீதி |
|---|---|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| வீதவரியும் வரியும் | 4,098,159 | 3,879,496 | 1,271,455 | 2,873,898 | 3,832,302 |
| குத்தகை வாடகை | 35,000 | 596,750 | 35,000 | 596,750 | -- |
| உரிமக்கட்டணங்கள் | 11,145 | 1,831,210 | -- | 1,831,210 | 11,145 |
| வேறு வருமானங்கள் | 28,252,753 | 39,810,026 | 19,511,933 | 2,175,801 | 46,375,045 |
| கூட்டுத்தொகை | | | | | 50,218,492 |

மீளாய்வாண்டின் திசம்பர் 31இல் ரூபா 50,218,492 மொத்த வருமானம் நிலுவையாக இருந்த

### 2.3.2 வீதவரியும் வரியும்

------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) வீதவரிகள் 05 ஆண்டுகளுக்கொரு தடவை மதிப்பிடப்பட வேண்டியபோதிலும், 2006ஆம் ஆண்டின் மதிப்பீட்டுப் பெறுமதியை அடிப்படையாகக்கொண்டு மீளாய்வாண்டிற்கான வீதவரிகள் அறவிடப்பட்டிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டின் திசம்பர் 31இல் ரூபா 3,776,012 வீதவரி நிலுவையாக இருந்ததுடன், ஓர் ஆண்டுக்கு மேற்பட்ட நிலுவை வீதவரியானரூபா 2,776,149 மேற்படி பெறுமதியினுள் அடங்கியிருந்தது. மீளாய்வாண்டில் பட்டியலிடப்பட்ட பெறுமதியான ரூபா 3,478,195 இல் 54 சதவீதம் மட்டுமே அறவிடப்பட்டிருந்தது. வீதவரி செலுத்தாமல் இருப்பவர்கள் தொடர்பில் 1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபைச்

சட்டத்தின் 158ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) அரச திணைக்களங்கள் மற்றும் சபைகளிலிருந்து 07 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலத்திலிருந்து அறவிடப்படாமலுள்ள நிலுவை வீதவரி மீதி ரூபா 706,037ஆக இருந்தது.

2.3.3 குத்தகை வாடகை
-------------------------------

2015 பாதீட்டு ஆவணத்தின்படி,குத்தகை வாடகையாக ரூபா 6,050,000 தொகை மதிப்பிடப்பட்டிருந்த போதிலும், அதில் ரூபா 596,750 தொகை மட்டுமே மீளாய்வாண்டின் போது அறவிடப்பட்டிருந்தது. இது 10 சதவீதமாக மட்டுமே இருந்தது.

2.3.4 உரிமக்கட்டணங்கள்
---------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஒவ்வொரு ஆண்டு பொருட்டும் அதிகார இடப்பரப்பின் வியாபாரங்கள் தொடர்பில் ஆய்வு மேற்கொண்டு குறித்த ஆய்வு அறிக்கையின்படி உரிம வருமானங்களை பட்டியலிடல் செய்ய வேண்டியபோதிலும், வருமான பரிசோதகர்களினால் தயாரிக்கப்பட்டிருந்த சோதனை அறிக்கை பூரணமாகாத காரணத்தினால், உரிமங்கள் ஆவணத்தின்படி,உரிம வருமானங்கள் அறவிடப்பட்டிருந்தன. உரிமங்கள் ஆவணத்தின்படி,மீளாய்வாண்டில் 1256 வியாபாரங்களிலிருந்து உரிமவருமானங்கள் சேகரிக்கப்பட்டிருப்பினும்,ஆய்வு அறிக்கையின்படி 485 வியாபாரங்கள் இனங்காணப்பட்டுள்ளன.

(ஆ) 2015 திசம்பர் 31இல் வர்த்தக உரிமக்கட்டணங்கள்ரூபா 11,145 நிலுவையாக இருந்ததுடன்,இந்நிலுவை 2011ஆண்டு முதல் முற்கொண்டு வரினும், நிலுவைத் தொகையை அறவிட்டுக்கொள்வதற்கு நடவடிக்கைஎடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 1988ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க மற்றும் 2000ஆம் ஆண்டின் 53ஆம் இலக்கசட்டங்களினால் திருத்தப்பட்டவாறான 1980ஆம் ஆண்டின் 47ஆம் இலக்கதேசிய சுற்றாடல் சட்டம் மற்றும் அதன் கீழ் விதிக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கு இணங்க, 2008 சனவரி 25ம் திகதிய 1533∴16 இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின்படி பிரகடனப்படுத்தப்பட்ட செயற்றிட்டங்களுக்கு ஏற்புடைய 68 தொழிற்சாலைகளுக்கு சுற்றாடல் உரிமம் வழங்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன் அதனால்ரூபா 474,500 வருமானத்தை சபை இழந்தது. .

2.3.5 வேறு வருமானங்கள்

----------------------------------

(அ) நிலப்பரப்பளவு வரி

மீளாய்வாண்டின் திசம்பர் 31 இல் நிலப்பரப்பளவு வரிரூபா 56,290 நிலுவையாக இருந்துடன், அதில் ரூபா 50,510 அதாவது மொத்த நிலுவையில் 89 சதவீதம் ஓராண்டுக்கு மேற்பட்ட காலத்திலிருந்தே அறவிடப்படாமலிருந்தது.

(ஆ) நீர்க்கட்டணம்

மீளாய்வாண்டு இறுதியில் நிலுவையாக இருந்த நீர்க்கட்டணம் ரூபா 213,252ஆக இருந்துடன்,இதில் ரூபா 13,612 ஓராண்டுக்கு மேற்பட்ட 08 நீர் வாடிக்கையாளர்களிடமிருந்து அறவிடப்படவேண்டிய நிலுவை வருமானமாகும். நீர் சேவையை வழங்கும்போது இரு தரப்பினர்களிடையே செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கையின் 03ஆம் பிரிவின்படி சபை நடவடிக்கை எடுக்காத காரணத்தினால் நீர்க்கட்டணம் தொடர்ந்தும்நிலுவையாக இருந்துவருகிறது.

2.3.6 நீதிமன்றத் தண்டப்பணங்கள் மற்றும் முத்திரைக் கட்டணம்

……………………………………………………………………………………

2015 திசம்பர் 31இல் நீதிமன்றத் தண்டப்பணங்கள் ரூபா 436,083 மற்றும் முத்திரைக் கட்டணங்கள் ரூபா 45,725,710 வருமதியாக இருந்தன. சகல நீதிமன்றத் தண்டப்பணங்கள் மற்றும் முத்திரைக் கட்டண தொகைகளில் ரூபா 12,544,895 கிடைத்துள்ளது என செயலாளர் 2016 யூலை 05 ஆம் திகதி எனக்கு அறிவித்திருந்தார்.

3 செயற்பாட்டு மீளாய்வு

……………………………………

3.1 முகாமைத்துவ வினைத்திறனின்மை

…………………………………………………………

நானாவித கடன்பட்டோர் மீதியினுள் ரூபா 506,372 பெறுமதியான 03 விடயங்கள் பல ஆண்டுகளாக காணப்பட்டபோதிலும், அந்த மீதிகளை அறவிட்டுக்கொள்வதற்கு அல்லது பொருத்தமானதை செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3.2 செயற்பாட்டு வினைத்திறனின்மை

……………………………………………………

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பழைய பிரதேச சபை கட்டடத்தின் நிலத்தளத்தின் 1ஆம் இலக்க அறை, 1981இல் வாடகை அடிப்படையில் ஒருவருக்கு

ஒப்படைக்கப்பட்டிருந்தது. பல ஆண்டுகளாக மேற்படி கடை அறையிலிருந்து வாடகை அறவிடப்படுவதில்லை என்பதுடன், வாடகைதாரர் உடன்படிக்கையின் பிரகாரம் செயலாற்றுவதில்லை என அவதானிக்கப்பட்டுள்ளது. அது தொடர்பிலான சட்ட நடவடிக்கைகளை புரிந்துகொள்வதற்கு ஏற்றவாறு சபை கோப்புகளை பேணவில்லை.

(ஆ) மீளாய்வாண்டு மற்றும் கடந்த ஆண்டுகளில் சபை அதிகார இடப்பரப்பினுள் அனுமதியற்ற 99 நிருமாணிப்புக்கள் தொடர்பில் சபை முறையான நடவடிக்கைகளை பின்பற்றி இருக்கவில்லை.

(இ) எழுத்திலான அனுமதியின்றி இலங்கை மொபிடெல் கம்பனி 02 தொலைதொடர்பு கோபுரங்களை சூரியகொட மற்றும் அமுனுபுர ஆகிய பிரதேசங்களில் 2013ஆம் ஆண்டிலும் முன்னர் நிருமாணிக்கப்பட்டிருந்தன. இந்த அனுமதியற்ற நிருமாணிப்புக்கள் தொடர்பில் தேவையான சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கு செயலாற்றி இருக்கவில்லை.

(ஈ) சபையின் நடவடிக்கைகள் தொடர்பில் தற்போது நீதிமன்றத்தில் 47 வழக்குகள் விசாரிக்கப்பட்டுவருவதுடன், குறித்த வழக்குகளில் ஆஜராகும் 04 சட்டத்தரணிகள் பொருட்டு 2014 மற்றும் 2015 ஆண்டுகளில் ரூபா 960,250 செலுத்தப்பட்டிருந்தது. இந்த 47 வழக்குகளில் 35 வழக்குகள் ஓராண்டுக்கு மேற்பட்ட காலத்திலிருந்து விசாரிக்கப்பட்டுவருகின்றன.

3.3 ஒப்பந்த நிர்வாகம்

…………………………….

3.3.1 பிலபிடிய குறுந்துகஸ்பிடிய பாதையை அபிவிருத்திசெய்தல் - ரூபா 500,000

……………………………………………………………………………………

……………………………….

இந்த செயற்றிட்டம் தொடர்பில் 2016 சனவரி மாதம் 22ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதிக சோதனையின்போது பின்வரும் விடயங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

(அ) வேலை விடயம் இலக்கம் 07இன் கீழ் நிருமாணிக்கப்பட்டிருந்த ஆதாரச் சுவர் பொருட்டு 6"X9"அளவிலான கற்கள் இடவேண்டியிருப்பினும்,6"X14", 8"X12"ஆகிய அளவிலான பெரிய கற்கள் இட்டு சுவர் நிருமாணிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 1:5 சீமெந்து மண் கலவையில் பாதுகாப்பு சுவர் கட்டவேண்டியிருந்தபோதிலும், கையால் உடைக்கக்கூடிய விதத்தில் பலவீனமான சாந்து கலவை இட்டு நிருமாணிக்கப்பட்டிருந்தது.

(இ) பாதை ஆரம்பத்தில் சுவரின் பகுதி நிருமாணிக்கப்பட்டு மீண்டும் கிட்டத்தட்ட 30 மீற்றர் தூரத்தில் எஞ்சிய பகுதி நிருமாணிக்கப்பட்டிருந்தது. குறித்த இரு பகுதிகளுக்கு இடையில் பாதையின் அருகில் அமைந்துள்ள வீடொன்றின் மலசலகூட முறைமை பாதையின் ஒரு பகுதியை இணைக்கும் வகையில் நிருமாணிக்கப்பட்டிருந்தமையினால், பாதையை பயன்படுத்த முடியாதிருந்துள்ளது. இதனால், செலவழித்த பணத்திலிருந்து உரிய பயனை பெறமுடியாதிருந்தது.

3.3.2 தெகிதெனிய பாதையிலிருந்து இஹல கொடல்ல பாதையில் மண் நிறைத்து மதகு அமைத்தல் - ரூபா 400,000

………………………………………………………………………………………………………………………

இந்த செயற்றிட்டம் தொடர்பில் 2016 சனவரி மாதம் 22ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதிக சோதனையின்போது பின்வரும் விடயங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

(அ) செலவுமதிப்பீட்டின் வேலை விடயம் இலக்கம் 03இன் கீழ் அடியின் தடிப்பம் 4 அங்குலமான கால்வாய் கொங்கிறீட் இடவேண்டியிருப்பினும், கால்வாய் அடியை சில இடங்களில் உடைத்து சோதித்த போது அதன் தடிப்பம் 2 அங்குலமானதாக அமைக்கப்பட்டிருந்தது. இதற்கு ரூபா 18,821 கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 1:5 சீமெந்து மண் கலவையில் பாதுகாப்பு சுவர் கட்டவேண்டியிருந்த போதிலும், கையால் உடைக்கக்கூடிய விதத்தில் பலவீனமான சாந்து கலவை இட்டு நிருமாணிக்கப்பட்டிருந்தது.

(இ) வேலை விடயம் இலக்கம் 07இன் கீழ் நிருமாணிக்கப்பட்டிருந்த ஆதாரச் சுவர் பொருட்டு 6"X9"அளவினை விட பெரிய கற்கள் இடப்பட்டிருந்தன.

3.3.3 பிரகதி மாளிகையை அபிவிருத்திசெய்தல் - ரூபா 490,000

………………………………………………………………………………………………………………

பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(அ) நிருமாணிப்பதற்கு முன்னர், அதற்கு ஏற்புடைய வரைபடம் தயாரிக்கப்பட்டு பிரதேச சபையின் அங்கீகாரம் பெற வேண்டியபோதிலும், வரைபடம் தயாரிக்கப்படாமல் கட்டடம் நிருமாணிக்கப்பட்டிருந்ததாக 2016 சனவரி மாதம் 22ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதிக சோதனையின்போது அவதானிக்கப்பட்டது.

(ஆ) 1978ஆம் ஆண்டின் 41ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபை சட்டத்தின் நியதிகளுக்கு இணங்க, கட்டடம் நிருமாணிக்கும் பொருட்டு அபிவிருத்தி உரிமமொன்றை பெற வேண்டியபோதிலும் அவ்வாறு அது

பெறப்பட்டிருக்கவில்லை என்பதுடன், வீதி அமைவுச் சான்றிதழும் பெறப்பட்டிருக்கவில்லை.

(இ) மேற்படி கட்டடம் நிருமாணிக்கும் காணி விகாரையொன்றுக்கு சொந்தமாக இருந்ததாக அவதானிக்கப்பட்டது.

(ஈ) செயற்றிட்டத்துக்கு ஏற்புடைய சாத்தியவள அறிக்கையின் 06ஆம் பந்திக்கு இணங்க, செயற்றிட்ட பிரேரணையின் தற்போதைய நிலமையாக பொதுச் சங்க மண்டபமொன்று இப்போது இல்லை என காட்டியிருப்பினும், பேராதெனிய பிரகதி அமைப்பில் உள்ளபடியான இருமாடிக் கட்டடத்தின் பகுதிகள் வியாபார நடவடிக்கைகளுக்காக வாடகைக்கு கொடுத்திருப்பததினால், சாத்தியவள அறிக்கையில் பிழையான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது.

3.3.4 ஒப்பந்தங்களை நிறைவேற்றுவதில் தாமதம்

-----------------------------------------------------------------

மீளாய்வாண்டிலும் கடந்த ஆண்டிலும் செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்ட ரூபா 15,831,263 பெறுமதி கொண்ட 50 செயற்றிட்டங்கள் இயைபான ஆண்டினுள் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

4 கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

…………………………………………………………………..

4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

………………………………

மீளாய்வாண்டு பொருட்டு தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டு ஆவணத்தின்படி, மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் செலவுகளை, உண்மையான வருமானம் மற்றும் செலவுகளுடன் ஒப்பிடுகையில், 02 வருமான விடயங்கள் 30மூ இருந்து 90மூ வரையிலும், 06 செலவு விடயங்கள் 16மூ இருந்து 79மூ வரையிலும் வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டமையினால், பாதீட்டு ஆவணமானது பயனுறு கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

4.2 சொத்து முகாமைத்துவம்

----------------------------------------

பயன்படுத்தாத, குறை பயன்பாடுள்ள சொத்துக்கள்

……………………………………………………………………………

ரூபா 1,200,000 பெறுமதியான க்று கெப் வாகனம் குறை பயன்பாடுள்ளதாக காணப்பட்டதுடன், ரூபா 5,672,300 கூட்டுபெறுமதியுடைய டபள் கெப்

வாகனமொன்று, 04 திராக்டர்கள்(உழவு இயந்திரங்கள்) மற்றும் 03 இழுவைகள் பயன்பாடின்றி இருந்தன.

3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

-----------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் மீது விசேட கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

அ. வருமான நிருவாகம்
ஆ. கடன்பட்டோர் ∴ கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு
இ. சொத்து முகாமைத்துவம்
ஈ. ஒப்பந்தக் கட்டுப்பாடு